**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**நாள்: 06.07.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

2024-25 ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இம்மாதம் 23 ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று முதல் 4 நாள் அரசு முறை பயணமாக ஒடிசா செல்ல உள்ளார்.

நமது நாட்டின் எதிர்காலம் இளைஞர்களால் தீர்மானிக்கப் படுகிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 8 ஆம் தேதி முதல், 3 நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார்.

பட்ஜெட் (8)

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் இம்மாதம் 22 ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 12 ஆம் தேதி வரை நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் விடுத்துள்ள செய்தியில், 2024-25 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இம்மாதம் 23 ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். மேலும், இதற்கான ஒப்புதலை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு தலைவர் (18)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று முதல் 4 நாள் அரசு முறை பயணமாக ஒடிசா செல்ல உள்ளார். புனித கடற்கரை நகரமான பூரி-யில் நாளை நடைபெற உள்ள ஜகன்நாத் பலபத்ரா, தேவி சுபத்ரா மற்றும் சுதர்சன் ஆகியோரின் உலக புகழ் பெற்ற ரத யாத்திரையை காண அவர் தமது சொந்த மாநிலத்திற்கு செல்ல உள்ளார். புதுடெல்லியில் இருந்து இந்திய விமானப் படையின் சிறப்பு விமானத்தில் தலைநகர் புவனேஸ்வர் செல்லும் அவர், பிஜிபட்நாயக் சர்வதேச விமான நிலையம்

வந்தடைந்தவுடன், விமான நிலையத்தில், உத்கல் மணி பண்டிட் கோபபந்து தாஸின் 96 ஆவது நினைவு தின நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். வரும் திங்கட்கிழமை புவனேஸ்வரில் வரலாற்று சிறப்பு மிக்க உதயகிரி மற்றும் கந்தகிரி குகைகளுக்கு சென்று அங்கு கலை மற்றும் கைவினை கல்லூரி, உத்கல் கலாச்சார பல்கலைக் கழக மாணவர்களுடன் அவர் கலந்துரையாட உள்ளார். மேலும், அதே நாளில் புவனேஸ்வருக்கு அருகில் உள்ள ஹரிதாமடா கிராமத்தில் பிரம்மகுமாரிகளின் தெய்வீக ஒய்வு மையத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார். வரும் செவ்வாய் கிழமை புவனேஸ்வரில் உள்ள தேசிய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 13 ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

தன்கர் 1(17)

நமது நாட்டின் எதிர்காலம் இளைஞர்களால் தீர்மானிக்கப் படுகிறது என்றும், இளைஞர்களின் ஆர்வமும், அர்ப்பணிப்பும் நமது நாட்டை வளர்ந்த தேசத்தின் பார்வைக்கு எடுத்துச் செல்லும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்திப் தன்கர் தெரிவித்துள்ளார். கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இன்று நடைபெற்ற இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்தின் 12 ஆவது பட்டமளிப்பு விழாவில அவர்

பங்கேற்று பேசினார். நாட்டில் இளைஞர்கள் வளர நல்ல சூழல் உள்ளதாகவும், அவர்கள் இந்தியாவில் ஆர்வத்தையும், திறமையையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். நமது நாடு வளர்ச்சி பாதையை நோக்கி முன்னேறி வருவதாகவும், அதை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், இந்தியாவின் விண்வெளி சாதனைகளை உலக நாடுகள் அங்கீகரித்து உள்ளதாகவும் திரு தன்கர் கூறினார். கடந்த ஆண்டில் நமது விண்வெளி பயணங்கள் பாராட்டுதலுக்கு உரியவை என்றும் அவர் தெரிவித்தார். வெளி நாட்டு உறவுகளை மேம்படுத்தவும், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் உதவிய விண்வெளி துறையை மேலும் உயரத்திற்கு கொண்டு செல்வதில்

தன்கர் 2 (8)

இஸ்ரோ மேற்கொண்ட முயற்சிகளையும் அவர் பாராட்டினார். நிகழ்ச்சியில் அவர் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்களை வழங்கினார். முன்னதாக 2 நாள் பயணமாக கேரள மாநிலத்திற்கு சென்றுள்ள அவருக்கு திருவூரில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு ஆரிப் முகமது கான், முதலமைச்சர் திரு பினராய் விஜயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திரு தன்கர் நாளை தமது கேரள பயணத்தை முடித்துக் கொண்டு புதுடெல்லி திரும்ப உள்ளார்.

மோடி பயணம் 1 (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 8 ஆம் தேதி முதல், 3 நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார். ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் அழைப்பை ஏற்று வரும் 8 தேதி மாஸ்கோ செல்லும் அவர் அங்கு நடைபெறும் 22 ஆவது இந்திய-ரஷ்ய வருடாந்திர மாநாட்டில் பங்கேற்று உரையாற்ற உள்ளார். அப்போது இந்தியா-ரஷ்யா இடையே நீடிக்கும் பல்வேறு உறவுகள் குறித்தும், புதிய உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், இரு நாட்டு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளனர்.

இந்நிலையில், பிரதமரின் ரஷ்ய பயணம் குறித்து புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வெளியுறவுத் துறை செயலாளர் திரு வினய் மோகன் வத்ரா, பல்வேறு அம்சங்கள் குறித்து ரஷ்ய அதிபரிடம் பிரதமர் ஆலோசனை நடத்த இருப்பதாக தெரிவித்தார்.

குறிப்பாக இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், பாதுகாப்பு, வணிகம், தொழில் முதலீடு, கல்வி, அறிவியல், தொழில்நுட்பம்

உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், இருநாட்டு தலைவர்களும் முக்கிய

*மோடி பயணம் 2 (6)*

ஆலோசனை நடத்துவார்கள் என்றும் தெரிவித்தார். தமது ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு வரும் 9 ஆம் தேதி ஆஸ்திரியாவிற்கு செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கு, அந்நாட்டு பிரதமர், அதிபர் மற்றும் தொழிலதிபர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். கடந்த 41 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியாவிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

*அமித் ஷா 1 (18)*

நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 2 லட்சம் கிராம பஞ்சாயத்துகளில் பல்நோக்கு வேளாண் கடன் சங்கத்தை அரசு அமைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் காந்தி நகரில் இன்று நடைபெற்ற 102 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார். கூட்டுறவு வங்கிகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பை வலியுறுத்தி அவற்றின் சேவையை வலுப்படுத்தும்

வகையில் நாட்டின் அனைத்து மாவட்ட மற்றும் மாநில கூட்டுறவு சங்கங்களும் அவற்றின் நிதி பரிவர்த்தனைகளை கூட்டுறவு வங்கிகளில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மேலும், குஜராத் மாநிலத்தின் பனஸ்கந்தா மற்றும் பஞ்சமஹால் மாவட்டங்களில் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டங்களின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார்.

நாட்டில் கூட்டுறவுத் துறையை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளையும் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில், நானோ யூரியா வாங்கும் மாநில விவசாயிகளுக்கான சிறப்பு உதவித் திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் புதுடெல்லியில் உள்ள அமுல் நிறுவனத்தின் முதல் ஆர்கானிக்

*அமித் ஷா* 2(5)

ஸ்டோரையும் அவர் திறந்து வைத்தார். மேலும், தேசிய கூட்டுறவு ஆர்கானிக் நிறுவனம் தயாரித்த பாரத்-ஆர்கானிக் பொருட்களையும் அவர் அறிமுகப் படுத்தினார். நிகழ்ச்சியில் மத்திய மாநகராட்சி இணையமைச்சர் திரு முரளிதர மோஹோல் மற்றும் கூட்டுறவுத் துறையின் முக்கிய தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.

*ராகுல்காந்தி* (5)

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி இன்று ஒரு நாள் பயணமாக குஜராத் சென்றுள்ளார். அகமதாபாத்தில் மாநில காங்கிரஸ் தொண்டர்களையும் அவர் சந்தித்து பேசினார். மேலும், குஜராத்தின் ராஜ்கோட் கேம்பில் தீ விபத்து உட்பட பல்வேறு துயர சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களையும் அவர் சந்தித்து பேசினார்.

*சிவராஜ் சிங்* (16)

நாட்டில் ஏழைகள் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி அதிக கவனம் செலுத்தி வருவதாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். சென்னை முட்டுக்காட்டில் உள்ள மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று அவர் ஆய்வு மேற்கொண்டார். தற்போது இங்கு 43 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மீன் ஏற்றுமதி நடைபெற்று வருவதாகவும், எதிர்காலத்தில் இது, 1 லட்சம் கோடி ரூபாய் என்ற அளவை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில், கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன்

அவசியத்தையும் எடுத்துரைத்தார். மேலும், புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டு, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஏழை-எளிய மக்களுக்கான வேலை வாய்ப்பு, உணவு பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றை மத்திய அரசு தொடர்ந்து வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நீட் (5)

இளநிலை மருத்துவ படிப்புக்கான கவுன்சிலிங் தேதி இன்னும் அறிவிக்கப்படாததால் ஒத்தி வைக்கப்பட்ட செய்தி தவறானது என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெளிவுப் படுத்தி உள்ளது. நீட் யூஜி கவுன்சிலிங் ஒத்தி வைக்கப்படுவது தொடர்பான ஊடக அறிக்கைகளுக்கு மத்தியில் இந்த விளக்கத்தை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

*ஷ்யாமா பிரசாத் முகர்ஜி* (6)

பாரதிய ஜனசங்க நிறுவனர் டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப் பட்டது. டாக்டர் முகர்ஜி 1951 ஆம் ஆண்டு பாரதிய ஜனசங்கத்தை நிறுவினார். அதன் பின்னர், 1980 ஆம் ஆண்டு பாரதிய ஜனசங்கம், பாரதிய ஜனதா கட்சி என மறு பெயரிடப்பபட்டது. விழாவில், பாரதிய ஜனசங்க நிறுவனருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

*விக்ரவாண்டி* (7)

தமிழகத்தில் விக்ரவாண்டி சட்டபேரவை தொகுதி இடைத் தேர்தலை ஒட்டி, வரும் 10 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டத்திற்கு ஊதியத்துடன் கூடிய உள்ளூர் விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. இத்தொகுதியில் வரும் திங்கட்கிழமை மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடையும் நிலையில், அங்கு அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். விக்ரவாண்டி சட்டப் பேரவை தொகுதியில் வரும் 10 ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் நிலையில், 13 ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

குறைதீர்ப்பு முகாம் (8)

புதுவை திருக்கனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் குறைதீர்ப்பு முகாம் இன்று கூனிச்சம்பட்டு அரசு அண்ணா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. முகாமில், பல்வேறு அரசு துறைகள், வங்கிகள், நிறுவனங்கள் பங்கேற்றன. இதில், இலவச சட்ட ஆலோசனைகள், வீட்டு வரி, குடிநீர் வரி, சொத்து வரி சம்பந்தமான குறைகள், மத்திய அரசின் மூலம் வழங்கப்படும் பல்வேறு கடன்கள், காப்பீடுகள் மற்றும் இதர சேவைகள் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

2024-25 ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இம்மாதம் 23 ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று முதல் 4 நாள் அரசு முறை பயணமாக ஒடிசா செல்ல உள்ளார்.

நமது நாட்டின் எதிர்காலம் இளைஞர்களால் தீர்மானிக்கப் படுகிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 8 ஆம் தேதி முதல், 3 நாள் அரசு முறை பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார்.